# திருநெல்வேலி மாநகராட்சி

## 18.05.2022 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

---

### பொருட்கள்

1) திருநெல்வேலி மாநகராட்சியில் பொதுமக்களின் குடிநீர் விநியோகம் குழாய் மூலம் தடைப்படும் அவசர காலங்களில் மாநகரப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யவும், மேலும் விரிவாக்க பகுதிகளில் குடிநீர் பகிர்மானக் குழாய் இல்லாத இடங்களில் மேற்படி பகுதிகளுக்கு நன்குடிநீர் விநியோகம் செய்வதற்கு போதுமான குடிநீர் லாரிகள் இம்மாநகராட்சியில் இல்லை. எனவே, மேற்படி குடிநீர் விநியோக பணிக்காக, புதிதாக 9000லிட்டர் கொள்ளளவு கொண்ட Tanker Lorry வாகனம் ஒன்றினை அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்ய வேண்டி உள்ளது.

மேலும், இம்மாநகராட்சியில் நிதிப் பற்றாக்குறையாக இருப்பதால், பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதிக்குழுவால் (CSR Fund) மேற்படி பொருள் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு, அவசர அவசியத்தினை முன்னிட்டு 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் லாரி ஒன்றினை கொள்முதல் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் இருந்து விலைப்புள்ளி பெறப்பட்டதில் மேற்படி குடிநீர் லாரி கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.27.00 இலட்சத்தினை கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியில் (CSR Fund) இருந்து செலவினம் மேற்கொள்ளலாம் என 11.04.2022ம் தேதிய CSR குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதின்படி, 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் லாரி ஒன்றினை கொள்முதல் செய்வதற்கு மாமன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்ட விபரப்படி, இம்மாநகராட்சியில் நிதிப் பற்றாக்குறையாக இருப்பதால், பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதிக்குழுவால் (CSR Fund) மேற்படி பொருள் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு, அவசர அவசியத்தினை முன்னிட்டு 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் லாரி ஒன்றினை கொள்முதல் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் இருந்து விலைப்புள்ளி பெறப்பட்டதில், மேற்படி குடிநீர் லாரி கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.27.00 இலட்சத்தினை கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியில் (CSR Fund)

இருந்து செலவினம் மேற்கொள்ளலாம் என 11.04.2022ம் தேதிய CSR குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதின்படி, 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் லாரி ஒன்றினை கொள்முதல் செய்வதற்கும் அதற்காகும் செலவினத் தொகையினை CSR Fund -ல் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

## தீர்மானம் எண்: 31 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

**2)** திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலம் கீழக்கண்ட வார்டு பகுதிகளில் போதிய தெருவிளக்கு வசதி இல்லாததால் இரவு நேரங்களில் பொதுமக்கள் நடமாட மிகவும் சிரமபடுவதை தவிர்க்கும் பொருட்டு அப்பகுதிகளில் போதிய தெருவிளக்கு வசதி ஏற்படுத்தி தருமாறும் மாமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

| வ.எண் | வார்டு எண் | இடம் | ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் அமைக்க வேண்டிய தெருவிளக்குகளின் எண்ணிக்கை | | | புதியதாக மின்கம்பம் நிறுவி அமைக்கவேண்டிய தெருவிளக்கு எண்ணிக்கை | | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 20W LED | 60W LED | 90W LED | 20W LED | 60W LED | |
| 1 | 31 | மேலகுலவணிகர்புரம் பாண்டித்துரை 1வது தெரு சாந்தமூர்த்தி தெரு கொக்கிரகுளம் முத்தமிழ் நகர் | 29 | | | | | 5.00 |
| 2 | 40 | அன்புநகர், பொன்விழாநகர், ராம்நகர் பகுதிகளில் ஏற்கனவே உள்ள 20W LED விளக்குகளை கழற்றிவிட்டு 90W LED அமைக்க | | | 13 | | | 1.50 |
| 3 | 41 | KLN காலனி, அப்போலோ காலனி, விஜிபி நகர், | 20 | | | | | 3.00 |
| 4 | 42 | பெருமாள்புரம் ஏலிம்தெரு | 2 | | | 7 | | 2.00 |
| 5 | 43 | B.B.C காலனி T.நகர் | 6 | | | | | 1.00 |
| 6 | 45 | சொக்கநாதர்தெரு. ஜமாலியா தைக்காதெரு, மேத்தமார் பாளையம், செல்வகாதர் தெரு பகுதிகளில் | 18 | | | 3 | | 3.20 |
| 7 | 48 | கொக்கட்டிகுளம், பீடிதொழிலாளர் காலனி, விஜிபி பாத்திமா நகர், | 29 | 15 | | | | 7.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 49 | ஆசுரான் கீழத்தெரு, அத்தியடி கிழத்தெரு | 2 | | | | | 0.30 |
| 9 | 50 | ஆமீம்புரம் ஞானியாரப்பாநகர், பிகாலனி,சித்திக்நகர்,அன்னை ஹாஜீரா காலேஜ் ரோடு | 22 | | | 8 | | 4.00 |
| 10 | 51 | இன்ஜினியர்ஸ் காலனி, ரோஜாநகர், திருநகர் பகுதிகளில் | 10 | | | | | 1.50 |
| 11 | 52 | சேவியர்காலனி, ராஜாநகர் மற்றும் பிரைட்நகர் பகுதியில் | 17 | | | | | 2.50 |
| 12 | 53 | NGO காலனி, சாரோன்நகர், பூங்கா அருகில் | 6 | | | | 2 | 1.50 |
| 13 | 54 | மிதிலாபுரிநகர், பங்கஜ்நகர், பனிமலர் பார்க் பகுதிகளில் | 41 | | | 1 | | 6.00 |
| | | மொத்தம் | 202 | 15 | 13 | 19 | 2 | 38.50 |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்குகள் இல்லாதால் அதில் 20W LED விளக்குகள் 202 எண்ணம் புதியதாக அமைக்கவும் 60W LED விளக்குகள் 15 எண்ணம் புதியதாக அமைக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் இருக்கும் 20W LED விளக்குகளை கழற்றிவிட்டு அதில் 13 எண்ணம் 90W LED விளக்குகள் அமைக்கவும், புதியதாக மின்கம்பம் நிறுவி அதில் 19 எண்ணம் 20W LED விளக்குகளும் 2 எண்ணம் 60W LED விளக்குகளும் அமைக்கவும் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய செலவுதொகை உட்பட உத்தேசமாக ரூ.38.50 இலட்சம் வரை செலவாகும். இதன் செலவிற்கும் மற்றும் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு மாதம் தோறும் ஏற்படும் மின்கட்டண செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்

## அலுவலககுறிப்பு

மேற்கண்டபொருளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்குகள் இல்லாததால் அதில் 20W LED விளக்குகள் 202 எண்ணம் புதியதாக அமைக்கவும் 60W LED விளக்குகள் 15 எண்ணம் புதியதாக அமைக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் இருக்கும் 20W LED விளக்குகளை கழற்றிவிட்டு அதில் 13 எண்ணம் 90W LED விளக்குகள் அமைக்கவும், புதியதாக மின்கம்பம் நிறுவி அதில் 19 எண்ணம் 20W LED விளக்குகளும் 2 எண்ணம் 60W LED விளக்குகளும் அமைக்கவும் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய

செலவுதொகை உட்பட உத்தேச செலவினம் ரூ.38.50 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1-1862-2022**

**தீர்மானம் எண்: 32 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

3) திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் 27 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 எண்ணம் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்களை வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்ளுதல் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2983/2022/SBM நாள் 24.02.2022ல் ரூ.67.43 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதின்படி மேற்படி பணிக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 46/2021-22-ன் படி மாநில அளவில் 01.04.2022-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 01.04.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1) M/s.Nellai Man Power Tirunelveli, (2) M/s.Jayram Ventures, Chennai ஆகிய இரு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி இரு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 08.04.2022 -ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் (1) M/s.Nellai Man Power Tirunelveli, (2) M/s.Jayram Ventures, Chennai ஆகிய ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனங்களின் விலை அட்டவணைகள் மட்டும் 25.04.2022ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | M/s.Jayram Ventures, Chennai நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு | M/s.Nellai Manpower Services, Tirunelveli நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் 27 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 எண்ணம் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்களை வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்ளுதல் | ரூ. 67,42,757/- | ரூ. 67,32,742/- | ரூ. 67,17,719/- |
| | | | 0.15% மதிப்பீட்டை விட குறைவு | 0.37% மதிப்பீட்டை விட குறைவு |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Nellai Man Power Tirunelveli நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.67,17,719/- ஆனது மதிப்பீட்டை விட 0.37% குறைவாக உள்ளதால், 26.04.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Nellai Man Power Tirunelveli ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.67,17,719/- மதிப்பீட்டை விட 0.37% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி M/s.Nellai Man Power Tirunelveli நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் 27 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 எண்ணம் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்களை வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்வதற்கு, 26.04.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Nellai Man Power Tirunelveli ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.67,17,719/- மதிப்பீட்டை விட 0.37% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(ஒ.பு.எண்.46/2021-22)**

**தீர்மானம் எண்: 33 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

4) திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்பு மற்றும் வணிக நிறுவனங்களுக்கு திருநெல்வேலி மண்டலம் - 8, தச்சநல்லூர் மண்டலம் - 17, மேலப்பாளையம் மண்டலம் - 24, பாளையங்கோட்டை மண்டலம் - 22 ஆக மொத்தம் 71 மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வப்போது பெய்து வரும் பருவமழை காரணமாகவும் மற்றும் மஞ்சள் காமாலை போன்ற பலதரப்பட்ட நோய்கள் வருவதற்கு குடிநீர் சுத்தமில்லாமல் இருப்பதும் ஒரு காரணமாகும். எனவே பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் நீரில் சரியான அளவில் குளோரின் கலப்பதற்கும், மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகளை சுற்றியுள்ள பகுதிகளை துாய்மையாக பராமரிக்கவும், திருநெல்வேலி மற்றும் தச்சநல்லூர் மண்டலத்திற்கு 2 நபர்கள் வீதம் 4 நபர்களும் பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் மண்டலங்களுக்கு 3 நபர்கள் வீதம் 6 நபர்களும் ஆக மொத்தம் 10 நபர்கள் கொண்ட அன்னை தெரசா சுய உதவிக் குழு 15.9.2021 முதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் மண்டலங்களில் அதிக அளவில் நீர் தேக்கத் தொட்டிகள் உள்ளதால், அவற்றை பராமரிக்க கூடுதலாக பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். எனவே திருநெல்வேலி மண்டலத்திற்கு கூடுதலாக 1 நபரும், தச்சநல்லூர் மண்டலத்திற்கு கூடுதலாக 2 நபர்களும், பாளையங்கோட்டை மண்டலத்திற்கு கூடுதலாக 3 நபர்களையும், மேலப்பாளையம் மண்டலத்திற்கு கூடுதலாக 4 நபர்களை 1.6.2022 முதல் பணியில் ஈடுபடுத்திடவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, நாள் ஒன்றுக்கு ரூ. 411/- ஊதியமாக வழங்கவும், ஆக மொத்தம் 20 நபர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2,54,820/-க்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்பு மற்றும் வணிக நிறுவனங்களுக்கு 71 மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரில்

சரியான அளவில் குளோரின் கலப்பதற்கும், மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகளை சுற்றியுள்ள பகுதிகளை துாய்மையாக பராமரிக்கவும், செயல்பட்டு வரும் 10 பணியாளர்களை கொண்ட அன்னை தெரசா சுய உதவிக் குழுவில் கூடுதலாக 10 பணியாளர்கள் (1.6.2022 முதல்) சேர்த்து மொத்தம் 20 பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திடவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, நாள் ஒன்றுக்கு ரூ. 411/- ஊதியமாக வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் மாதம் ஒன்றிற்கு ரூ. 2,54,820/-க்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்

(H2/7560/2017)

**தீர்மானம் எண்: 34 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

5) தமிழக அரசின் அரசாணை (நிலை) எண்.53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022ன்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை.28 அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படியும், திருநெல்வேலி மாநகராட்சியில் 2022-2023 முதலாம் அரையாண்டு (01-04-2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய மாமன்ற அவசரக்கூட்டத்தீர்மானம் எண்.15 நாள்.11.04.2022 இன்படி அனுமதி வழங்கி தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் கீழ்க்காணும் விபரப்படி மண்டல மதிப்பு நிர்ணயம் செய்து அதன் அடிப்படையில் சொத்துவரி நிர்ணயிக்க பொதுமக்கள் அறியும் வகையில் 12-04-2022 அன்று தினசரி நாளிதழ்களில் சொத்துவரி சீராய்வு குறித்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் தெரிவிக்க விளம்பரம் செய்யப்பட்டு ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் கோரப்பட்டது. மேற்படி சொத்துவரி சீராய்வு நிர்ணயம் குறித்து மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் வழங்கப்பட்ட ஆட்சேபனை மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு உரிய பதிலறிக்கை சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கு வழங்கப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும் மண்டல அளவில் 12-05-2022 முடிய பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் / ஆட்சேபனைகள் ஏதும் பெறப்படவில்லை என மண்டல உதவி ஆணையாளர்களால் சான்றளிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க 01-04-2022 முதல் கீழ்க்காணும் விபரப்படி புதியதாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மண்டல மதிப்புகளின் அடிப்படையில் ஊர்ஜிதம் செய்து சொத்துவரி பொதுச்சீராய்வு மேற்கொண்டு மாமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

சொத்துவரி

| வ. எண் | தற்போதைய மண்டலம் | மண்டல மதிப்பு ரூ.பை | புதிதாக நிர்ணயிக்கப்படும் மண்டல மதிப்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | பரப்பளவு (ச.அடி/உபயோகம் | உயர்வு செய்வதற்கான காரணி | புதிய மண்டல மதிப்பு |
| 1 | A | 1.15 | குடியிருப்பு | | ரூ. பை |
| | | | < = 600 | 1.25 | 1.45 |
| | | | 601 -1200 | 1.5 | 1.75 |
| | | | 1201-1800 | 1.75 | 2.00 |
| | | | >1801 | 2.00 | 2.30 |
| | | 2.30 | தொழிற்சாலை | 1.75 | 4.00 |
| | | 3.45 | வணிகம் | 2.00 | 6.90 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 | 6.00 |
| 2 | B | 0.60 | குடியிருப்பு | | |
| | | | < = 600 | 1.25 | 0.75 |
| | | | 601 -1200 | 1.5 | 0.90 |
| | | | 1201-1800 | 1.75 | 1.05 |
| | | | >1801 | 2.00 | 1.20 |
| | | 1.20 | தொழிற்சாலை | 1.75 | 2.10 |
| | | 1.80 | வணிகம் | 2.00 | 3.60 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 | 3.60 |
| 3 | C | 0.50 | குடியிருப்பு | | |
| | | | < = 600 | 1.25 | 0.65 |
| | | | 601 -1200 | 1.5 | 0.75 |
| | | | 1201-1800 | 1.75 | 0.90 |
| | | | >1801 | 2.00 | 1.00 |
| | | 1.00 | தொழிற்சாலை | 1.75 | 1.75 |
| | | 1.50 | வணிகம் | 2.00 | 3.00 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 | 2.65 |

மேலும் குளிரூட்டப்பட்ட கல்யாண மண்டபங்கள், அதிநவீன மருத்துவமனைகள், விடுதிகளுடன் கூடிய நட்சத்திர உணவகங்கள், வணிக வளாகங்கள் மற்றும் திரையரங்குடன் கூடிய வணிக வளாகங்கள், தீம் பார்க் போன்ற சிறப்பு கட்டிடங்களுக்கு (Special Buildings) கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயிக்க குழு பரிந்துரைத்துள்ளது.

| மண்டலம் | தற்போது நிர்ணயிக்கப்படும் அடிப்படை மதிப்பு ரூ. |
|---|---|
| A | 11.00 |
| B | 7.50 |
| C | 4.00 |

1) மேலும், மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்பந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவுள்ளது.
2) 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவுள்ளது.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவுள்ளது.
4) 1800 சதுரடிக்கு அதிகமான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவுள்ளது.
5) வணிக நிறுவனங்களுக்கு /வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில், வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவுள்ளது.
6) தொழிற்சாலை மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூாரி கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்து வரி உயர்வு செய்யப்படவுள்ளது.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவிகிதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்படவேண்டும். மேலும் சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டிடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்படவுள்ளது.
8) தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்படவுள்ளது.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்படவுள்ளது.

**அலுவலக குறிப்பு**

பொருளில் கண்டுள்ளவாறு 01-04-2022 முதல் சொத்துவரி/காலிமனைவரி பொதுச்சீராய்வு மேற்கொள்ளுவதற்கு மாமன்றத் தீர்மான எண்.15 நாள்.11.04.2022ல் அனுமதியளித்து நிர்ணயம் செய்யப்பட்ட அடிப்படை மதிப்புகளை ஊர்ஜிதம் செய்து சொத்துவரி சீராய்வு செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் அ1/1451/2022) மை.அ.

**தீர்மானம் எண்: 35 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

6) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் மாநகராட்சிப் பகுதிகளில் நவீன பயணிகள் நிழற்குடைகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது மேற்படி நிழற்குடைகளின் பின்புறம் விளம்பர பலகைகளை ஒரு வருட காலத்திற்கு வாடகை அடிப்படையில் மேற்கொள்வதற்கு ரூ.46.72 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு ஆணையாளர் அவர்களின் ந.க.எண்.E1/6526/2015/ dated 31.08.2021ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி 13.09.2021, 18.10.2021 ஆகிய நாட்களில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும் எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியும் பெறப்படவில்லை.

எனவே, மூன்றாவது அழைப்பாக மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்:46/2021-22-ன் படி 24.03.2022 அன்று tn.tntenders,gov.in ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டு, மேற்படி பணிக்கு 07.04.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் **M/s.Mohan Ads Tirunelveli** என்ற ஒரே ஒரு நிறுவனத்திடம் இருந்து மட்டும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி

கூர்ந்தாய்வுக்குழுவால் 08.04.2022-ம் தேதியன்று, மேற்படி நிறுவனத்தின் தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்ப்நதப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு மேற்படி நிறுவனத்தின் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகள் குறித்து கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. அதில் மேற்படி **M/s.Mohan Ads Tirunelveli** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதினால் மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளி அட்டவணையானது 11.04..2022-ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-.

| வ. எண | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Mohan Ads நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சி சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பயணிகள் நிழற்குடைகளின் பின்புறம் வாடகை அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு விளம்பர பலகை அமைக்கும் பணி | ரூ.46,72,800/- | ரூ.47,52,000/- |
| | | | 1.69% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு பெறப்பட்ட ஓரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான **M/s.Mohan Ads Tirunelveli** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 1.69% அதிகமாக (ஒப்பந்த மதிப்பு ரூ.47,52,000/-) உள்ளது.

எனவே, 11.04.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் **M/s.Mohan Ads Tirunelveli** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ..47,52,000/-ஆனது மதிப்பீட்டை விட 1.69 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் மாநகராட்சிப் பகுதிகளில் நவீன பயணிகள் நிழற்குடைகள் அமைக்கும்

பணி முடிக்கப்பட்டுள்ளது மேற்படி நிழற்குடைகளின் பின்புறம் விளம்பர பலகைகளை வாடகை அடிப்படையில் மேற்கொள்வதற்கு ரூ.46.72 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், 11.04..2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் **M/s.Mohan Ads Tirunelveli** ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.47,52,000/-ஆனது மதிப்பீட்டை விட 1.69% அதிகமாக ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(ஓ.பு.அ.எண். 46/ 2021-22)**

**தீர்மானம் எண்: 36 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

7) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், வார்டு எண் 25, “சீர்மிகு நகரம்” திட்டத்தின் கீழ் வ.உ.சி. விளையாட்டு மைதானத்தினை மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட இடத்தை 05.03.2022 தேதியன்று ஸ்தல ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்கள் பொருநை நெல்லை புத்தக திருவிழா நடத்த வேண்டியுள்ளது, எனவே, மேற்படி திட்டப் பணியை தற்காலிகமாக நிறுத்தி புத்தகத் திருவிழா 17.03.2022 தேதி முதல் 27.03.2022 தேதி வரை நடைபெற உள்ளதால் மேற்படி புத்தக கண்காட்சி திருவிழா முடிந்த பின் மீண்டும் பணியை துவங்கும்படி உத்தரவிட்டுள்ளார், மேலும் 12.03.2022 மற்றும் 13.03.2022 ஆகிய தினங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், காவல் துறை துணை ஆணையாளர் அவர்கள், R.D.O. அவர்கள், மற்றும் உதவி ஆணையாளர் அவர்கள், உதவி செயற்பொறியாளர் அவர்கள் மேற்படி வ.உ.சி. விளையாட்டு மைதானத்தில் ஆய்வு மேற்கொண்டு மத்தி பகுதியில் புத்தக ஸ்டால், மற்றும் மேடைப்பேச்சாளர்கள் வி.ஐ.பி. அரங்கமும் தற்போது வ.உ.சி. விளையாட்டு மைதானத்தின் ஸ்டேஜ் பகுதியாக அமைந்துள்ள இடத்தில் Food Court அமைக்கவும், Indoor Stadium-த்தில் பழங்கால பொருட்களுக்கான கண்காட்சி அமைக்கப்படயுள்ளதால், மாநகராட்சி மூலம் மேற்படி மைதானத்தில் தென்கிழக்குப் பகுதியில் பழம்பொருள் கண்காட்சிக்கும் (Indoor Stadium) புத்தகம் ஸ்டாலுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக 5 தற்க்காலிக கழிப்பிடம் மின் வசதி மற்றும் தண்ணீர் வசதியுடன் அமைத்து கொடுக்கும்படி உத்தரவிட்டுள்ளார்கள். எனவே, கீழ்க்கண்ட படி தற்காலிக கழிப்பிடம் அமைக்க வேண்டியுள்ளது.

- Earth work,
- P.C.C. 1:4:8,

- ➢ Basement Brick Work,
- ➢ Indian Water Closet,
- ➢ Plastering,
- ➢ G.I. Sheet மூலம் Side Wall & Roof அமைத்தல்,
- ➢ PVC Water Tank,
- ➢ Plumping Works,
- ➢ Electrical Works,
- ➢ Leach Pit.

மேற்கண்ட மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களின் உத்திரவின்படி மேற்படி அமைப்புகளுடன் கூடிய தற்காலிக கழிப்பிடம் அமைக்கவும், மேலும் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு உடனடியாக மேற்கொள்ள வேண்டி உள்ளதால் மேற்படி பணியினை மேற்கொள்ள **ரூ.3.30** லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் உடனடியாக பணி மேற்கொள்ள உள்ளூர் விலைபுள்ளிகள், பெற்று மேற்படி பணியை மேற்கொள்ள பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலை புள்ளிகளின் விபரம்.

1. **ஆர்.கே. எண்டர்பிரைசஸ்,**
   **1/61-A,** பிள்ளையார் கோவில் தெரு,
   மனப்படைவீடு, திருநெல்வேலி**.** - மதிப்பீட்டை விட 0.5% குறைவாக

2. **திரு. க. அமராவதி,**
   **327,** டார்லிங் நகர்,
   திருநெல்வேலி – 627 011**.** - மதிப்பீட்டை விட 1% அதிகம்

3. **திரு. எல். சங்கர்,**
   **75,** 6வது குறுக்குத் தெரு, காசிம் நகர்,
   பாளையங்கோட்டை, திருநெல்வேலி - மதிப்பீட்டுதொகைக்கு செய்கிறேன்.

மேற்படி வரப்பெற்ற மூன்று விலை புள்ளிகளில் குறைந்த விலை புள்ளியான மதிப்பீட்டை விட 0.5% குறைவாக கொடுத்துள்ள **திரு. ஆர்.கே. எண்டர்பிரைசஸ்** நிறுவனத்தின் விலை விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

எனவே, வ.உ.சி. விளையாட்டு மைதானத்தில், புத்தகத் திருவிழாவிற்கு வரும் பொதுமக்களின் நலன் கருதி, மேற்கண்ட தற்காலிக கழிப்பிடம் மின் வசதி மற்றும் தண்ணீர் வசதியுடன் அமைத்து கொடுக்க வேண்டியதின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியை மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை **ரூ. 3,30,000/-** ஆகும். எனவே, மேற்படி பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்கண்ட பணியை மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பிட்டு தொகை ரூ.3,30,000/- க்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள பெறப்பட்ட விலை புள்ளிகளில் குறைந்த விலை கொடுத்துள்ள **ஆர்.கே.எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின்** விலைப்புள்ளியை அங்கீகரிக்கவும், தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994-ஆம்

வருடத்திய சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பாளையங்கோட்டை மண்டலம், வார்டு எண் 25, "சீர்மிகு நகரம்" திட்டத்தின் கீழ் வ.உ.சி. விளையாட்டு மைதானத்தினை மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட இடத்தை 05.03.2022 தேதியன்று ஸ்தல ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்கள் பொருநை நெல்லை புத்தக திருவிழா நடத்த வேண்டியுள்ளது, எனவே, மேற்படி திட்டப் பணியை தற்காலிகமாக நிறுத்தி புத்தகத் திருவிழா 17.03.2022 தேதி முதல் 27.03.2022 தேதி வரை நடைபெற உள்ளதால் மேற்படி புத்தக கண்காட்சி திருவிழா முடிந்த பின் மீண்டும் பணியை துவங்கும்படி உத்தரவிட்டுள்ளார், 12.03.2022 மற்றும் 13.03.2022 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், காவல் துறை துணை ஆணையாளர் அவர்கள், R.D.O. அவர்கள், மற்றும் உதவி ஆணையாளர் அவர்கள், உதவி செயற்பொறியாளர் அவர்கள் மேற்படி வ.ஊ.சி. விளையாட்டு மைதானத்தின் மத்தி பகுதியில் புத்தக ஸ்டால், மேடைப்பேச்சாளர்கள் அரங்கத்திலும், தற்போது வ..உ.சி. விளையாட்டு மைதானத்தின் ஸ்டேஜ் பகுதியாக அமைந்துள்ள இடத்தில் Food Court அமைக்கவும், Indoor Stadium-த்தில் பழங்கால பொருட்களுக்கான கண்காட்சி அமைக்கப்படயுள்ளதால், மாநகராட்சி மூலம் மேற்படி மைதானத்தில் தென்கிழக்குப் பகுதியில் பழம்பொருள் கண்காட்சிக்கு (Indoor Stadium) புத்தகம் ஸ்டாலுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக 5 தற்காலிக கழிப்பிடம் மின் வசதி மற்றும் தண்ணீர் வசதியுடன் அமைத்து கொடுக்கும்படி உத்தரவிட்டுள்ளார்கள். மேற்படி உத்திரவின் படி வ.உ.சி. விளையாட்டு மைதானத்தில், புத்தகத் திருவிழாவிற்கு வரும் பொதுமக்களின் நலன் கருதி, மேற்கண்ட தற்காலிக கழிப்பிடம் அமைக்க **ரூ.3.30** லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3,30,000/-க்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியை தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994ஆம் வருடத்திய சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **ஆர்.கே.எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு** வேலை ஆணை வழங்கியதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

## தீர்மானம் எண்: 37 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

8) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், வார்டு எண் 25-ல், (புதிய வார்டு எண் 32) மண்டல அலுவலகம் அமைந்துள்ளது. 19.02.2022 அன்று நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று 02.03.2022 அன்று மாமன்ற

உறுப்பினர்கள் பதவி ஏற்றுள்ளனர். எனவே மண்டல அலுவலகத்தில் மாமன்றக் கூட்டரங்கு மற்றும் பாளை மண்டல தலைவர் (சேர்மன்) ஆகிய அறைகளை பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு மற்றும் புதுப்பிக்க வேண்டிய நிலை உள்ளது. எனவே, மேற்படி பராமரிப்பு பணியில் மேற்கொள்ள வேண்டிய பணிகளின் விபரம்.

- Toilet floor and Wall Tiles – முதலியன சேதமடைந்துள்ளது.
- IWC , EWC, Urinals - முதலியன சேதமடைந்து பயன்படுத்த இயலாமல் உள்ளது.
- Toilet room doors - சேதமடைந்துள்ளது.
- Chairman room main door- சேதமடைந்துள்ளது.
- Electrical works - சேதமடைந்துள்ளது.
- Meeting Hall and Chairman room Air Condition - பழுதடைந்து பயன்படுத்த இயலாமல் உள்ளது.
- Ceiling Fan - பழுதடைந்துள்ளது.
- Electrical work and Plumbing work - புதுப்பிக்க வேண்டியுள்ளது.
- Chairman room Table and Chairs - சேதமடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

மேற்கண்ட பராமரிப்பு பணிகளும், புதிதாக அமைக்கப்பட வேண்டிய பணிகளும் மேற்கொண்டால்தான் மண்டல தலைவர் அறை மற்றும் மாமன்றக் கூட்டரங்கு முதலியன பயன்படுத்த இயலும். எனவே மேற்படி பணிகளை அவசர அவசியத்தை முன்னிட்டு உடனடியாக மேற்கொள்ள வேண்டி உள்ளதால் மேற்படி பணிகள் செய்வதற்கு **ரூ.6.10** லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி மண்டலத் தலைவர் அறை மற்றும் மண்டல அலுவலக கூட்டரங்கு முதலியவற்றில் மராமத்து பணிகள் செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை **ரூ.6.10/-** லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும், மேற்படி பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் உடனடியாக பணி மேற்கொள்ள பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலை புள்ளிகளின் விபரம்.

1. **ஆர்.கே. எண்டர்பிரைசஸ்,**
   **1/61-A,** பிள்ளையார் கோவில் தெரு,
   மனப்படைவீடு, திருநெல்வேலி**.** -மதிப்பீட்டை விட 0.5% குறைவாக

2. **திரு. க. அமராவதி,**
   **327,** டார்லிங் நகர்,
   திருநெல்வேலி – 627 011**.** - மதிப்பீட்டை விட 1% அதிகம்

3. **திரு. எல். சங்கர்,**
   **75,** 6வது குறுக்குத் தெரு, காசிம் நகர்,
   பாளையங்கோட்டை, திருநெல்வேலி -மதிப்பீட்டுதொகைக்கு செய்கிறேன்.

மேற்படி வரப்பெற்ற மூன்று விலை புள்ளிகளில் குறைந்த விலை புள்ளியான மதிப்பீட்டை விட 0.5% குறைவாக கொடுத்துள்ள **திரு. ஆர்.கே. எண்டர்பிரைசஸ்** நிறுவனத்தின் விலை விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

எனவே, மேற்படி மண்டலத் தலைவர் அறை மற்றும் மண்டல அலுவலக கூட்டரங்கு முதலியவற்றில் மராமத்து பணிகள் செய்ய வேண்டியதின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியை மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை **ரூ. 6,10,000/-** ஆகும். எனவே, மேற்படி பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்கண்ட பணியை மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பிட்டு தொகை ரூ.6,10,000/- க்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள பெறப்பட்ட விலை புள்ளிகளில் குறைந்த விலை கொடுத்துள்ள **ஆர்.கே.எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின்** விலைப்புள்ளியை அங்கீகரிக்கவும், தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994-ஆம் வருடத்திய சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், வார்டு எண் 25-**ல்,** (புதிய வார்டு எண் 32) மண்டல அலுவலகம் அமைந்துள்ளது. 19.02.2022 அன்று நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று 02.03.2022 அன்று மாமன்ற உறுப்பினர்கள் பதவி ஏற்றுள்ளனர். எனவே மண்டல அலுவலகத்தில் மாமன்றக் கூட்டரங்கு மற்றும் பாளை மண்டல தலைவர் (சேர்மன்) ஆகிய அறைகளை பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு மற்றும் புதுப்பிக்க வேண்டிய நிலை உள்ளது. மேலும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டால்தான் மண்டல தலைவர் அறை மற்றும் மாமன்றக் கூட்டரங்கு முதலியன பயன்படுத்த இயலும். எனவே, மேற்படி பணிகளை அவசர அவசியத்தை முன்னிட்டு உடனடியாக மேற்கொள்ள வேண்டி உள்ளதால், மேற்படி பணிகள் செய்வதற்கு **ரூ.6.10** லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மண்டலத் தலைவர் அறை மற்றும் மண்டல அலுவலக கூட்டரங்கு முதலியவற்றில் மராமத்து பணிகள் செய்திட மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6,10,000/-க்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியை தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994ஆம் வருடத்திய சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **ஆர்.கே.எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு** வேலை ஆணை வழங்கியதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

## தீர்மானம் எண்: 38 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

9) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், வார்டு எண் 25, “சீர்மிகு நகரம்” திட்டத்தின் கீழ் வ.உ.சி. விளையாட்டு மைதானத்தினை மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட இடத்தை 05.03.2022 தேதியன்று ஸ்தல ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்கள் பொருநை நெல்லை புத்தக திருவிழா நடத்த வேண்டியுள்ளது, எனவே மேற்படி திட்டப் பணியை தற்காலிகமாக நிறுத்தி

புத்தகத் திருவிழா 17.03.2022 தேதி முதல் 27.03.2022 தேதி வரை நடைபெற உள்ளதால் மேற்படி புத்தக கண்காட்சி திருவிழா முடிந்த பின் மீண்டும் பணியை துவங்கும்படி உத்தரவிட்டுள்ளார்கள். 12.03.2022 மற்றும் 13.03.2022 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், காவல் துறை துணை ஆணையாளர் அவர்கள், R.D.O. அவர்கள், மற்றும் உதவி ஆணையாளர் அவர்கள், உதவி செயற்பொறியாளர் அவர்கள் மேற்படி வ.உ.சி. விளையாட்டு மைதானத்தில் ஆய்வு செய்தபோது பேச்சாளர்கள் மற்றும் வி.ஐ.பி.அரங்கம் பின்பகுதியில் வி.ஐ.பி.கள் பயன்படுத்தும் வகையில் Mobile Toilet ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலரும் பயன்படுத்தும் வகையில் அமைக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மேற்படி உத்தரவின்படி புத்தகத் திருவிழா வி.ஐ.பி. மற்றும் பேச்சாளர்கள் அரங்கம் பின்புறம் Mobile Toilet இரண்டு எண்ணம் கீழ்க்கண்ட வசதிகளுடன் அமைக்க வேண்டியுள்ளது.

- Earth work for Leach Pit
- Mobile Toilet
  - Indian Style Mobile Toilet Executive Model Cabin
  - Size: 4' x 4' x 7'
  - Made of 25 x 25 mm B Class CR Tube Strong Steel Structure
  - The Steel Structure topped with 3 Layers of Hand made UV Resistant FRP with PU coat.
  - One coat of Anti-Rust Enamel Primer, two coat of Multi color PU.
  - Provision of Flush, Wash Basin, Water tap, Electrical Bulb Holder and Ventilation.
- Plumping Works

மேற்கண்ட மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களின் உத்திரவின்படி மேற்படி அமைப்புகளுடன் கூடிய Mobile Toilet இரண்டு எண்ணம் அமைக்கவும், மேலும் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு உடனடியாக மேற்கொள்ள வேண்டி உள்ளதால் மேற்படி பணியினை மேற்கொள்ள பொதுபணித்துறை மற்றும் குடிநீர் வடிகால் வாரிய விலைப்பட்டியலில் (PWD & TWAD SOR) விலை விகிதம் இல்லாததால், உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ள **ரூ.0.92** லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் உடனடியாக பணி மேற்கொள்ள உள்ளூர் விலைபுள்ளிகள், பெற்று மேற்படி பணியை மேற்கொள்ள பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலை புள்ளிகளின் விபரம்.

1. **ஆர்.கே. எண்டர்பிரைசஸ்,**
   **1/61-A,** பிள்ளையார் கோவில் தெரு,
   மனப்படைவீடு, திருநெல்வேலி**.** - மதிப்பீட்டை விட 0.5% குறைவாக

2. **திரு. க. அமராவதி,**
   **327,** டார்லிங் நகர்,
   திருநெல்வேலி – 627 011**.** - மதிப்பீட்டை விட 1% அதிகம்
3. **திரு. எல். சங்கர்,**
   **75,** 6வது குறுக்குத் தெரு, காசிம் நகர்,
   பாளையங்கோட்டை, திருநெல்வேலி - மதிப்பீட்டுதொகைக்கு செய்கிறேன்.

மேற்படி வரப்பெற்ற மூன்று விலை புள்ளிகளில் குறைந்த விலை புள்ளியான மதிப்பீட்டை விட 0.5% குறைவாக கொடுத்துள்ள **திரு. ஆர்.கே. எண்டர்பிரைசஸ்** நிறுவனத்தின் விலை விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

எனவே, வ.உ.சி. விளையாட்டு மைதானத்தில், புத்தகத் திருவிழாவிற்கு வரும் வி.ஐ.பி.கள் நலன் கருதி, Mobile Toilet மின் வசதி மற்றும் தண்ணீர் வசதியுடன் அமைத்து கொடுக்க வேண்டியதின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியை மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை **ரூ.92,000/-** ஆகும். எனவே, மேற்படி பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்கண்ட பணியை மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பிட்டு தொகை ரூ.92,000/- க்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள பெறப்பட்ட விலை புள்ளிகளில் குறைந்த விலை கொடுத்துள்ள **ஆர்.கே.எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின்** விலைப்புள்ளியை அங்கீகரிக்கவும், தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994-ஆம் வருடத்திய சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

பாளையங்கோட்டை மண்டலம், வார்டு எண் 25, வ.உ.சி. விளையாட்டு மைதானத்தில் 17.03.2022 தேதி முதல் 27.03.2022 தேதி வரை பொருநை நெல்லை புத்தக திருவிழா நடைபெறுவதால, மேற்கண்ட வ.உ.சி. விளையாட்டு மைதானத்தை 05.03.2022 அன்றும் 12.03.2022 மற்றும் 13.03.2022 ஆகிய தேதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், காவல் துறை துணை ஆணையாளர் அவர்கள், R.D.O. அவர்கள், மற்றும் உதவி ஆணையாளர் அவர்கள், உதவி ஆணையாளர் அவர்கள், உதவி செயற்பொறியாளர் அவர்கள் மேற்படி வ.உ.சி. விளையாட்டு மைதானத்தின் ஆய்வு செய்து பேச்சாளர்கள் மற்றும் வி.ஐ.பி.அரங்கம் பின்பகுதியில் வி.ஐ.பி.கள் மற்றும் பேச்சாளர்கள் பயன்படுத்தும் வகையில் Mobile Toilet ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலரும் பயன்படுத்தும் வகையில் மின் வசதி மற்றும் தண்ணீர் வசதியுடன் அமைத்து கொடுக்கும்படி உத்தரவிட்டுள்ளார்கள். மேற்படி உத்திரவின் படி வ.உ.சி. விளையாட்டு மைதானத்தில், புத்தகத் திருவிழாவிற்கு வரும் வி.ஐ.பி.கள் மற்றும் பேச்சாளர்கள் நலன் கருதி, ற்கண்ட Mobile Toilet அமைக்க **ரூ.0.92** லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பணியின் அத்தியாவசியத்தை

கருத்தில் கொண்டு மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.92,000/-க்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியை தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994ஆம் வருடத்திய சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **ஆர்.கே.எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு** வேலை ஆணை வழங்கியதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

## தீர்மானம் எண்: 39 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

10) 2022 ஆண்டு நகர்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு (19.02.2022) அன்றைய தினம் வாக்கு சாவடிகளில் பணிபுரியும் வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் மூன்று வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு தேவைப்படும் Table, Chair, மற்றும் EVM இயந்திரத்தினை வைப்பதற்கு Table மற்றும் வாக்குச்சாவடி மையங்களுக்கு 5Amps Plug Point, 200 W Focus Light, Tube Light வசதி Fan, வசதி மற்றும் வாக்குச்சாவடி மையங்களின் முன்பகுதியில் திறந்த வெளியாக இருக்கும் பகுதிகளில் சாமியான பந்தல் அமைத்திடவும் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி முதலியன அடிப்படை வசதிகள் வாக்குச்சாவடிகளில் தேர்தலுக்கு முந்தைய தினம் மற்றும் தேர்தல் நடக்கும் தினம் (18.02.2022 மற்றும் 19.02.2022) ஆகிய தினங்களில் அமைத்திட இவ்வலுவலக வேலை ஆணை மதிப்பீட்டு எண்: 93/2021-22, நாள்: 11.02.2022-யின்படி ஒப்பந்ததாரர் **திரு.ஆர்.கே.என்டர்பிரைசஸ்** நிறுவனத்திற்கு வேலை ஆணை வழங்கப்பட்டு 18.02.2022 அன்று வாக்குச்சாவடிகளுக்கு மேற்கண்ட அடிப்படை வசதிகள் அமைக்கும் பொழுது கீழ்க்கண்ட இனங்கள் ஒவ்வொரு வாக்குச்சவடிகளிலும் காவல்துறை மற்றும் தேர்தல் அலுவலர்களின் வேண்டுகோளின்படி கூடுதலாக தேவைப்பட்டதால் தேர்தல் பணியில் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்கண்ட வாக்குச்சாவடிகளில் கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒவ்வொரு வாக்குச் சாவடிகளிலும் நுழைவுவாயிலில் வாக்காளர்களுக்கு Sanitizer-ஐக் கொண்டு கைகளை சுத்தம் செய்வதற்கு Table மற்றும் Chair அமைக்கப்பட்டுள்ளது. மேலும் வெயில் அதிகமாக இருப்பதால் கூடுதலாக சாமியானா பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் திருமண மண்டபங்களில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு கூடுதல் தடுப்பு (Partition) அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக பணி மேற்கொள்ளப்பட்டதின் விபரம்

| வ. எண் | விபரம் | தேவைப்படும் மொத்த அளவு/ எண்ணம் | அளவு/ எண்ணம் | ஆர்.கே. எண்டர்பிரைசஸ் (தொகை ரூபாயில்) | K. அமராவதி (தொகை ரூபாயில்) | எல். சங்கர் (தொகை ரூபாயில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | Long Table | 268 nos | 1 no | *80.00 / நாள்* ஒன்றுக்கு | *100.00 / நாள்* ஒன்றுக்கு | *95.00 / நாள்* ஒன்றுக்கு |
| 2 | Partition | 14 nos | 1 no | *150.00 / நாள்* ஒன்றுக்கு | *180.00 / நாள்* ஒன்றுக்கு | *200.00 / நாள்* ஒன்றுக்கு |
| 3 | Chair | 441 nos | 1 no | *9.00 / நாள்* ஒன்றுக்கு | *11.00 / நாள்* ஒன்றுக்கு | *15.00 / நாள்* ஒன்றுக்கு |
| 4 | Pedestal fan | 78 nos | 1 no | *295.00 / நாள்* ஒன்றுக்கு | *300.00 / நாள்* ஒன்றுக்கு | *320.00 / நாள்* ஒன்றுக்கு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | Samiyana | 3600 sq.ft. | 1.00 sq.ft. | *10.00 /Sq.Ft (நாள் ஒன்றுக்கு)* | *12.00 /Sq.Ft (நாள் ஒன்றுக்கு)* | *15.00 /Sq.Ft (நாள் ஒன்றுக்கு)* |
| 6 | Painting Booth Numbers | 140 nos | 1 no | *125.00 (ஒன்றுக்கு)* | *138.00 (ஒன்றுக்கு)* | *150.00 (ஒன்றுக்கு)* |

எனவே, 2022 நகர்புற உள்ளாட்சி தேர்தலின் அவசர அவசியத்தை முன்னிட்டும், வாக்குச் சாவடிகளில் பணிபுரியும் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, கூடுதலாக மேற்படி பணியை மேற்கொண்டமைக்கு, குறைந்த விலை புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் **ஆர்.கே. எண்டர்பிரைசஸ்** நிறுவனத்தின் விலை புள்ளியை அங்கீகரித்து ரூ.2.16 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை **ரூ.2,16,000/-** க்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள பெறப்பட்ட விலை புள்ளிகளில் குறைந்த விலை கொடுத்துள்ள **ஆர்.கே. எண்டர்பிரைசஸ்** நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளியை அங்கீகரிக்கவும் மற்றும் தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994-ஆம் வருடத்திய சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி 2022 ஆண்டு நகர்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு (19.02.2022) அன்றைய தினம் வாக்கு சாவடிகளில் பணிபுரியும் வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் மூன்று வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு தேவைப்படும் Table, Chair, மற்றும் EVM இயந்திரத்தினை வைப்பதற்கு Table மற்றும் வாக்குச்சாவடி மையங்களுக்கு 5Amps Plug Point, 200 W Focus Light, Tube Light வசதி Fan, வசதி மற்றும் வாக்குச்சாவடி மையங்களின் முன்பகுதியில் திறந்த வெளியாக இருக்கும் பகுதிகளில் சாமியான பந்தல் அமைத்திடவும் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி முதலியன அடிப்படை வசதிகள் வாக்குச்சாவடிகளில் தேர்தலுக்கு முந்தைய தினம் மற்றும் தேர்தல் நடக்கும் தினம் (18.02.2022 மற்றும் 19.02.2022) ஆகிய இரு தினங்களுக்கு அமைத்திட இவ்வலுவலக வேலை ஆணை மதிப்பீட்டு எண்: 93/2021-22, நாள்: 11.02.2022-யின்படி ஒப்பந்ததாரர் **திரு.ஆர்.கே.என்டர்பிரைசஸ்** நிறுவனத்திற்கு வேலை ஆணை வழங்கப்பட்டு 18.02.2022 அன்று வாக்குச்சாவடிகளுக்கு மேற்கண்ட அடிப்படை வசதிகள் அமைக்கும் பொழுது மேற்கண்ட இனங்கள் கூடுதலாக தேவைப்பட்டதால் தேர்தல் பணியில் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு, வாடகை அடிப்படையில் வாங்கிட உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று அதில் குறைந்த விலை புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் **ஆர்.கே. எண்டர்பிரைசஸ்** நிறுவனத்தின் விலை புள்ளியை அங்கீகரித்து ரூ.2.16 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை **ரூ.2,16,000/-** க்கு நிர்வாக அனுமதியும், 2022 நகர்புற உள்ளாட்சி தேர்தலின் அவசர அவசியத்தை முன்னிட்டும், வாக்குச் சாவடிகளில் பணிபுரியும் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994ஆம் வருடத்திய சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் குறைந்த

விலைப்புள்ளி கொடுத்துள்ள **ஆர்.கே. எண்டர்பிரைசஸ்** நிறுவனத்திற்கு வேலை ஆணை வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 40 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---